ආයතනයේ නම: කර්මාන්ත අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர்: கைத்தொழில் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Name of the Institution: Ministry of Industries**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee On Public Accounts in terms of Standing Order No. 119(4)**

ගරු අමාත්‍යතුමා
கௌரவ அமைச்சர்
Hon. Minister
011-2435248
Fax : 011-2390885

ලේකම්
செயலாளர்
Secretary
011-2436123
011-2436124
Fax : 011-2449402

අමාත්‍යාංශය
அமைச்சு
Ministry
011-2392149
011-2392150
Fax : 011-2390941

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்
E-mail
secretarymid@gmail.com

# කර්මාන්ත අමාත්‍යාංශය
# கைத்தொழில் அமைச்சு
# MINISTRY OF INDUSTRIES

තැ. පෙ. 570, 73/1, ගාලු පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව த. பெ. இல. 570, 73 / 1, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
P. O. Box 570, 73/1, Galle Road, Colombo 03, Sri Lanka

මගේ අංකය / எனது இல. / My No. MIC/FIN/02/05/06

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2023.04.

**அரச கணக்குக் குழுவினால் நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகளை சமர்ப்பித்தல்**

பாராளுமன்ற அமர்வு இல: - இல. 183

நிறுவனத்தின் பெயர்: - கைத்தொழில் அமைச்சு

| 2020 ஆம் ஆண்டிற்கான அரச கணக்குக் குழுவால் கண்டறியப்பட்ட பலவீனங்கள் | அந்த பலவீனங்களை போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய சூழ்நிலை |
|---|---|
| சேதங்கள் பற்றிய பதிவேட்டை இற்றைவரைப்படுத்தவில்லை. | சேதங்கள் பற்றிய பதிவேடு இற்றைவரைப்படுத்தி பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| ஒரு வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் 06 மாதங்களுக்கும் குறைவான காலத்தில் அப்புறப்படுத்தப்படவில்லை. | வாகனங்களை உரியவாறு அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, பெருந்தோட்ட அமைச்சு அந்த வாகனங்களை கோரிய போதும் பல மாதங்கள் கடந்தும் வாகனங்களை கொண்டு செல்லவில்லை. ஆகையால் அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. குறித்த அமைச்சினால் வாகனங்கள் பெற்றுக்கொள்ளாத காரணத்தால், அகற்றும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 28.03.2.23 அன்று வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. அங்கு KW-8777 லேண்ட் ரோவர் டிஸ்கவரி வாகனம் ரூ.12,368,000.00க்கும், KY-3709 லேண்ட் ரோவர் டிஸ்கவரி வாகனம் ரூ.13,989,989.00க்கும் விற்கப்பட்டது. |
| 29.12.2016 திகதியிட்ட 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் எரிவு பற்றிய பரிசோதனை செய்யப்படவில்லை. | தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடி மற்றும் QR கோட்டா முறை அடிப்படையில், வாகனங்களின் எரிபொருள் நுகர்வு குறித்த சோதனைகளை செயல்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் இருந்தன. அமைச்சின் மேலதிகச் செயலாளரின் (நிர்வாக) இல. MIC/TR/02/04/02 மற்றும் 2023.02.16 திகதியிட்ட கடிதங்கள் மூலம் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் சோதனை நடத்தி அறிக்கைகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு தற்போது அந்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் எஞ்சி இருப்பது | பணியில் இருந்து விலகிய டி.எம்.ஜி.பி.எம். ஷியாமலி அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ.78,750/- மற்றும் இடைநிறுத்தம் செய்யப்பட்ட திரு.இ.கே.டி. பிரனாந்துவிடம் இருந்து அறவிட வேண்டிய அனர்த்தக் கடனின் மீதியான ரூ.100,208/- இதில் அடங்கும். குறித்த அதிகாரிகளிடமிருந்து கடன் பணத்தை மீளப்பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் தற்போதைய நிலைமை பின்வருமாறு.<br>**<u>1. திருமதி டி.எம்.ஜி.பி.எம். ஷியாமலி</u>**<br>கடனை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது ஆரம்பித்துள்ளது.<br><br>**<u>2. திரு.இ.கே.டி. பிரனாந்து</u>**<br>இந்த உத்தியோகத்தர் மரணம் அடைந்துள்ளதோடு, வாரிசுகளிடம் இருந்து தொகையை அறவிடுவதற்கு செயலாளர் அனுமதி அளித்துள்ளார். அதன்படி திரு.ஈ.கே.டி. பர்னாந்துவின் வாரிசுகளின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| மீளாய்வு ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாமை. | இந்த அறிக்கை 30.05.2021 அன்று பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டி இருந்த போதிலும், 270 வன் பிரதிகள் மற்றும் 02 மென் பிரதிகளுடன் 28.09.2021 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அந்த நேரத்தில் நாட்டில் பரவிய கொரோனா தொற்று காரணமாக, அமைச்சின் பல்வேறு துறைகளில் உள்ள உத்தியோகத்தர்களும் கோவிட் நோய்க்கு ஆளாகியதால், அநேகமான உத்தியோகத்தர்கள் அவ்வப்போது தனிமைப்படுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும், சில பிரிவுகளை அவ்வப்போது தற்காலிகமாக மூட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. மேலும், அலுவலக நடவடிக்கைகள் இயங்கும் நாட்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.<br><br>இந்த நிலைமைகளின் காரணமாக, உரிய திகதிகளில் தகவல்களைப் பெறுவது கடினமாக இருந்தது.<br><br>மேலும், இந்த அறிக்கையை அச்சிடும்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.. அச்சகங்கள் நீண்ட காலமாக மூடப்பட்டிருப்பதாலும், அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் கோவிட் நோயால் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தாலும் அச்சடிக்கும் பணிகளில் சிறிது தாமதம் ஏற்பட்டது.<br><br>மேற்கூறிய விடயங்கள் காரணமாக, குறித்த அறிக்கையை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்ய முடியவில்லை என்பதோடு, உரிய திகதிக்கு முன்னதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் முடியவில்லை. |
| அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். | அமைச்சிற்கு அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 121 ஆகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் DMS/CM 27 மற்றும் 09/04/2020 திகதியிட்ட கடிதம் மூலம் அமைச்சிற்கு 100 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளதோடு, DMS/CM 27 மற்றும் 18/10/2022 திகதியிட்ட கடிதம் மூலம் 21 கைத்தொழில் அபிவிருத்தி |

| | |
|---|---|
| | உத்தியோகத்தர்கள் கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர். 2020 பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட 67 உத்தியோகத்தர்கள் அமைச்சில் பணிபுரிகின்றனர் தற்போது (2023.03.31) 188 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர்.<br><br>தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையை 2019 ஆம் ஆண்டு முதல் இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதன் காரணமாக அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களை விட அதிகமாகும். மேலும், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்ததாக, ஒவ்வொரு பிரதேச மற்றும் மாவட்ட செயலகத்துக்கும் தலா ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் என 358 அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.<br>தற்போது இல. DMS/CM/27 மற்றும் 09/04/2020 திகதியிட்ட கடிதம் மூலம் அமைச்சிற்கு 275 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் 300 அபிவிருத்தி அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.<br>தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சிற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையை மீறியுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவியை ஒப்புதலுக்கு, கோப்பு இல. MIC/ADM/03/Cadre மற்றும் 17.02.2023 திகதியிட்ட கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| முழு ஊழியர்களும் உட்பட செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படவில்லை. | தற்போது, செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டுள்ளன. |

**ஒப்பம்/டாக்டர் ரமேஷ் பத்திரண (பா.உ),**
**கைத்தொழில் அமைச்சர்.**